தட்டச்சு, வணிகக் கணக்கியல் (Book-Keeping) முதலிய பல பாடங்களில் தட்டச்சு என்னும் பாடத்தின் தகுதி மட்டும் 1974-75-ம் ஆண்டு முதல் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடத்தும் "அரசு தொழில் கல்வி பரிட்சையில்" தட்டச்சு ஹையர் பரிட்சைக்குச் சமமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. வணிகக் கணக்கியல் என்னும் பாடத்தின் தகுதியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அதற்கான பாடத் திட்டத்தை மாற்றும் ஆலோசனையும் இல்லை.

Vasectomy Operation

*207 Q. Thiru P. R. THOMAS (on behalf of Thiru K. S Ganapathi): Will the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that a Vasectomy Operation was performed on a mentally unsound bachelor in the Krishnapuram Government Hospital in Tiruchirappalli District;

(*b*) whether the Collector of Tiruchirappalli has conducted an enquiry through the District Family Planning Maternity and Child Health Officer, at Tiruchirappalli in this case; and

(*c*) if so, the details thereof?

"வாசக்டமி" அறுவை சிகிச்சை.

திரு. பி. ஆர் தாமஸ் (திரு கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கிருஷ்ணபுரம் அரசினர் மருத்துவமனையில் புத்தி சுவாதீனமற்ற பிரம்மச்சாரி ஒருவருக்கு "வாசக்டமி" அறுவை சிகிச்சை செய்யப்பட்டதென்பது உண்மையா ?

(இ) இந்நேர்வில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளியிலுள்ள மாவட்ட குடும்ப நலத் திட்ட மகப்பேறு சிறுர்நல அதிகாரி மூலம் விசாரணை ஒன்றை நடத்தியுள்ளாரா ?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) கேள்வியில் குறிப்பிட்ட இளைஞன் 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி அன்று கிருஷ்ணபுரம் தொடக்க சுகாதார நிலையத்திற்கு வாசக்டமி அறுவை சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டதாகவும் ஆனால் அவன் சித்த சுவாதீனமற்ற நிலையில் இருந்ததால் அந்நிலைய மருத்துவ அதிகாரி அறுவை சிகிச்சை செய்ய மறுத்துவிட்டதாக விசாரணையிலிருந்து தெரிய வந்தது. திருச்சி மாவட்ட குடும்ப நலத்திட்ட மகப்பேறு குழந்தைநல அதிகாரி 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதியில் அவ்விளைஞனை நேரில் பார்வையிட்டு பரிசோதித்ததில் அவனுக்கு வாசக்டமி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது உண்மையென்று தெரிந்த போதிலும் எங்கு, எப்பொழுது அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதனைத் தெளிவாக அறியமுடியவில்லை. அவ்விளைஞன் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ந் தேதி முதல் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி வரையில் சித்த சுவாதீனமற்ற நிலையில் வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தான் எனவும் அந்நிலையில் யாராவது அவனை எங்காவது அறுவை சிகிச்சை செய்து கொள்ள தூண்டியிருக்கக் கூடும் என்பது மட்டும் புலனாகிறது. அவ்விளைஞன் 1974-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் தேதி ரயில்வே விபத்தில் இறந்துவிட்டான். இருப்பினும் எங்கு, எப்பொழுது, யாரால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பது பற்றிய சான்றுகள் கிடைக்க வில்லை.

Food Adulteration.

*208 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of cases registered in connection with food adulteration during 1972–73 and 1973–74; and

(*b*) among them, (i) the number of cases ended in conviction and (ii) the number of cases ended in acquittal?

உணவில் கலப்படம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1972–73, 1973–74-ஆம் ஆண்டுகளில் உணவில் கலப்படம் செய்தது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) (i) அவைகளுள் தண்டனை விதிக்கப்பட்டவை (ii) தண்டனை விதிக்கப்படாதவை முறையே எத்தனை?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: (அ) உணவில் கலப்படம் செய்தது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் முறையே,

1972–73: 4,541; 1973-74: 4,778